1978 மார்ச் 31] [Thiru K. Narayanaswami Mudaliyar]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR : Sir, I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10-30)

(3) ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்களுக்கு அரசு வழங்கியுள்ள கூடுதல் ஈட்டுப் படியை திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கப்போவதில்லை என வெளியில் அறிவிக்கப்பட்டதும் அது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அந்த கூடுதல் படியையும் தொலைபேசி வசதிக்காக அறிவிக்கப்பட்ட கூடுதல் படியையும் வாங்கப்போவதில்லை என்பது குறித்து

* திரு. சி. கோவிந்தராசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்னை. நேற்றைய தினம் இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகள் சிலவற்றை வழங்கினார்கள். அதன்படி, காம்பன்சேட்ரி அலவன்சு ஏற்கெனவே இருப்பது 200 ரூபாய் என்பது 350 ரூபாயாகவும், டெலிபோனுக்கு 100 ரூபாய் என்பது 150 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. அந்தச் சமயத்திலே நான் எழுந்து கூறினேன். என். ஜி. ஓக்களுக்கு ஊதியக் குழு பரிந்துரை செய்யப்போவதாகச் சொல்கிறார்கள். இதைத் தவிர, இங்கே பணியாற்றக் கூடிய பணியாளர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நோ. பாயிண்ட் ஆப் ஆர்டர். எழுதி அனுப்புங்கள்.

திரு. சி. கோவிந்தராசன்; நான் இந்தப் பிரச்னையைச் சொல்லி விடுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இதிலே ஒழுங்குப் பிரச்னைக்கே வழி இல்லை.......

*திரு. சி. கோவிந்தராசன்; சட்ட மன்றத்திலே சலுகைகள் அறிவிக்கும்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியவர்கள் இங்கே இருந்தார்கள். ஆனால், வெளியிலே அவர்களுடைய சட்ட மன்றக் குழு கூடி, நாங்கள் இந்த காம்பன்

894. உறுப்பினர்களுக்கு அரசு வழங்கியுள்ள கூடுதல் ஈட்டுப்படியை திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கப்போவதில்லை என வெளியில் அறிவிக்கப்பட்டதும் அது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அந்த கூடுதல் தொலைபேசி வசதிக்காக அறிவிக்கப்பட்ட கூடுதல் படியையும் வாங்கப்போவதில்லை என்பது குறித்து

[திரு. சி. கோவிந்தராசன்] [1978 மார்ச் 31

சேடரி அலவன்சு, ரூ. 150 பெறப் போவதில்லை என்றும், 50 ரூபாய் போன் அலவன்சு மட்டும் பெறப் போவதாகவும் அறிவிக்கப்பட்டு இன்றைக்குப் பத்திரிகையிலே செய்தி வெளிவந்திருக்கிறது. நேற்று அறிவித்த அடிப்படையில், கொடுக்கப்பட்ட சலுகைக்கான உத்தரவு நிறைவேற்றப்படும் என்று நினைக்கிறேன். அப்படியானால், இந்த 150 ரூபாயை அவர்கள் வாங்குவார்களா அல்லது வாங்கப் போவதில்லையா? அப்படி வாங்கப் போவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்கள். நானும் இங்கே ஒன்றை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேற்சொன்ன இந்த 150 ரூபாய் சம்பந்தப்பட்ட வரையிலும் நாங்களும் வாங்குவதில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆர்டர் பாஸ் பண்ணுவதற்கு முன்பாக இந்த அறிவிப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 13 (1)-ல் இதைப் பற்றிச் சம்பந்தப்பட்ட சட்டத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

''Any person entitled to any salary or allowances under this Act may relinquish a whole or any portion thereof''

ஆகவே இது உங்கள் விருப்பம். இங்கே இந்த அவையிலே அதற்கு ஒழுங்குப் பிரச்னை கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. ஒழுங்குப் பிரச்னை என்று தாங்கள் கூறி, இந்த அவையிலே ஒரு அறிவிப்பைத் தெரிவித்திருக்கிறீர்கள். இந்தத் தகவலை எனக்கு எழுதி அனுப்பியிருக்கலாம். அதை விட்டுவிட்டு, ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியிருக்கிறீர்கள். அது சரியல்ல. சம்பளமோ, படியோ வாங்குவதும் வாங்காததும் உங்கள் பிரியம். அதற்கு இங்கே ஒழுங்குப் பிரச்னை தேவையில்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தன்னிலை விளக்கம் கூற விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கோவிந்தராஜன் அவர்கள் தங்கள் கட்சி எடுத்துள்ள முடிவை அறிவித்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் ஒன்று கூடி ஒரு முடிவெடுத்தார்கள் என்று சொன்னார்கள். அதைச் சொல்லிவிட்டு, இந்த 150 ரூபாய் தேவையில்லை என்கிறார்களே, அதை அவர்கள் வாங்கப் போகிறார்களா, இல்லையா என்று கேட்டார்கள். பத்திரிகைச் செய்தியிலேயே இது தெளிவாக வந்திருக்கிறது. இதை அவர்கள் வாங்க மாட்டார்கள் என்பது தெளிவாக வந்திருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(8) அறிவிப்புகள்

1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1978 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/78) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) 1978-ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/78)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவ*(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/78) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பகுதி குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றும் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1978) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன் மொழிந் திருக்கிறேன். சென்னை மாநகரம் மற்றும் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குள் வரும் புறநகர்ப் பகுதிகள் ஆகியவற்றின் குடிநீர் வழங்கும் பணியையும், சாக்கடை நீர் அகற்றும் பணியையும் சென்னை மாநகராட்சியும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றமும் கவனித்து வருகின்றன. ஐந்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், உலக சுகாதார நிறுவனம், இந்திய அரசு ஆகியோருக்கிடையே ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி, சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுவதிலும் குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு முதலீடு செய்வதற்கு முன்னர் ஆய்வுகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு அனுமதித்தது.

நிறுவன அமைப்பு நிர்வாகம், நிதி விவகாரங்கள் குறித்து ஆலோசனை வழங்கவும், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான குடிநீர் வழங்கள் கழிவு நீர் அகற்றுவது குறித்த பெருந்திட்டமொன்றைத் தயாரிக்கவும் உலக சுகாதார நிறுவனம் சில தொழில் நுட்ப ஆலோசகர்களை நியமித்தது. ஆலோசகர்கள் ஒப்பந்தத்தின்படி இடைக்கால அறிக்கையுடன் பெருந் திட்டமொன்றையும் ஆலோ சகர்கள் அனுப்பினர். இடைக்கால அறிக்கை குறித்து அரசு பரிசீலனை செய்தது. உலக சுகாதார நிறுவனம் பரிவுரை

* 14—6—1978 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.